# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1982 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகச் சட்டம்

---

*[1982, மார்ச்சு 11 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

1982, மார்ச்சு மாதம் 12 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 90 தபாற் செலவு : சதம் 50

*1982 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகச் சட்டம்*

*[1982, மார்ச்சு மாதம் 11 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*ச.வ.—ஓ. 87/80*
*1413*

**இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தைத் தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும், அதனோடு தொடர்புபட்டவையான அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானவொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1\. இச்சட்டம் 1982 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரால் நியமிக்கப்படக்கூடிய அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும். **சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.**

## பாகம் I

### இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் அமைப்பும், குறிக்கோள்களும், தத்துவங்களும், பணிகளும்

2\. (1) இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் (இதனகத்துப் பின்னர் இது "நிறுவகம்" எனக் குறிப்பீடு செய்யப்படுகின்றது) என அழைக்கப்படவேண்டிய நிறுவகமொன்று, 6 ஆம் பிரிவின்கீழ் அப்போதைக்கு நிறுவகத்தின் உறுப்பினர்களாயுள்ள ஆட்களைக் கொண்டிருப்பதாகத் தாபிக்கப்படுதல் வேண்டும். **இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தைத் தாபித்தல்.**

(2) நிறுவகமானது, (1) ஆம் உட்பிரிவால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரினால் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் என்பதுடன், இடையறுவழியுரிமையையும் பொது இலச்சினையொன்றையும் கொண்டிருத்தலும் வேண்டும்; அத்துடன், அது அதன் கூட்டிணைக்கப்பட்ட பெயரில் வழக்குத் தொடரலாம் என்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடரவும்படலாம்.

(3) ஆளும் பேரவையின் உறுப்பினர்கள் நிறுவகத்தின் உறுப்பினர்களாதல் வேண்டும்.

3\. (1) பின்வருவன நிறுவகத்தின் பொதுக்குறிக்கோள்களாதல் வேண்டும் :— **நிறுவகத்தின் பொதுக் குறிக்கோள்கள்.**

(அ) பகிரங்க அலுவலர்கள் அவர்களது அலுவலகக் கடமைகளைப் பயனுற நிறைவேற்றுவதற்கு அவசியமான அறிவுத் திறனையும், தொழிற்றிறன்களையும், நடத்தைப்பாங்கையும் பயிற்சிமூலம் அவர்கள்மாட்டு அபிவிருத்தி செய்தல்;

(ஆ) முகாமைத்துவம், பகிரங்க நிருவாகம் என்னும் துறைகளில் பயிற்சிப் பாடநெறிகளை ஒழுங்குசெய்தல்;

(இ) நிறுவகத்தினால் நடாத்தப்படும் பயிற்சிப் பாடநெறிகள் தொடர்பான சான்றிதழ்களையும் திப்புளோமாக்களையும் வழங்குதல்;

ஏ 61133—6,900 (01/82)

(ஈ) எல்லா மட்டங்களிலும் திறமையான, பயனுறு நிருவாகத்தை உறுதிசெய்வதன்பொருட்டு பகிரங்க சேவையடங்கலாக தகுதி வாய்ந்த மேற்பார்வைநிலை, துணைபுரிநிலை பணியாட்டொகுதிப் பதவியணியொன்றை அபிவிருத்திசெய்தல் ;

(உ) மதியுரை வழங்குவதற்கும், கலந்தாலோசனைச் சேவைக்கும், சிறப்புப் பணியொதுக்கங்களுக்கும் என முகாமைத்துவத்தின் பல்வேறு பணிநிலைத் துறைகளிலும் சிறப்பாளர்களின் சேவை அரசாங்கத்துக்கும் நாட்டுக்கும் கிடைக்கப்பெறச் செய்தல் ;

(ஊ) பகிரங்கத்துறை முகவராண்மை நிலையங்களது அமைப்பு முகாமை முறைமைகளை அவை மீளாய்வு செய்வதிலும், முன் னேற்றுவதிலும் அவற்றுக்கு உதவுதல் ;

(எ) கலந்தாலோசனைப் பணியொதுக்கங்களைப் பொறுப்பேற்று நடாத்துதல் ;

(ஏ) முகாமைத்துவக் கோட்பாடுகள், பழக்கங்கள், அமைப்புத்துறைக் கோட்பாடுகள், பழக்கங்கள் அத்துடன் பகிரங்க நிருவாக முறை மைகள் என்பவற்றை நுனித்தாய்ந்து மதிப்பீடு செய்வதற்கும், திரிபுபடுத்துவதற்கும் ஆன நுண்ணுய்வரங்கொன்றை ஏற்பாடு செய்தளித்தல் ;

(ஐ) முகாமையை அபிவிருத்தி செய்தலிலும், பணிநியமங்களைத் தாபித் தலிலும், ஈடளிப்புத் திட்டங்களைத் தீர்மானித்தலிலும், பொது வாக அவற்றின் விருத்தித்திறனை முன்னேற்றுதலிலும் பகிரங் கத்துறை அமைப்புக்களுக்கு உதவுதல் ;

(ஒ) முகாமைப் பயிற்சியிலும், ஆராய்ச்சியிலும், அவை தொடர்பான நடவடிக்கைகளிலும், இலங்கையிலும் வெளிநாட்டிலும் உள்ள வேறு அமைப்புக்களுடனும், குழுக்களுடனும், தனியாட்களுட னும் ஒன்றுசேர்ந்து தீவிரமாக உடனுழைத்தல் ;

(ஓ) தோதான தேசிய, சர்வதேசக் குழுக்கள் முன்னிலையிலும், மாநாடு களிலும் நிறுவகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துதல் ;

(ஔ) அவசியமானவிடத்து, அங்கீகரிக்கப்பட்ட தேசிய அல்லது சர்வ தேச அமைப்புக்களின் உதவியுடன் முகாமைத்துவம் தொடர்பி லும், பகிரங்க நிருவாகம் தொடர்பிலும் மாநாடுகளையும் கருத் தரங்குகளையும் ஏற்பாடுசெய்தலும், நடாத்துதலும், புத்தகங்களை யும் சஞ்சிகைகளையும் வெளியிடுதலும் ; அத்துடன்

(க) நிறுவகத்தின் பணிகள், செயற்பாடுகள் என்பன தொடர்பில் பொதுமக்களுக்கும் இயைபான நிறுவனங்களுக்கும் தகவல் பரப்புதல்.

(2) ஓராம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் விடயத்தின் மீதும், அல்லது எல்லா விடயங்களின்மீதும், அத்துடன் அமைச்சரால் நிறுவகத்துக்கு ஆற்றுப்படுத்தப்படக்கூடியவாறான ஏதேனும் வேறு கரு மத்தின்மீதும் அமைச்சருக்கு மதியுரை வழங்குதல் நிறுவகத்தின் கடமை யாதல் வேண்டும்.

4. நிறுவகமானது அதனது குறிக்கோள்களையும் கடமைகளையும் நிறைவேற்றுவதற்கு நியாயமாக அவசியமாகக்கூடியவாறான அத்தகைய தத்துவங்களையும், உரிமைகளையும், பணிகளையும் கொண்டிருத்தல் வேண்டும்; அத்துடன், நிறுவகமானது, குறிப்பாக— நிறுவகத்தின் தத்துவங்கள்.

(அ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை எத்தகைய ஏதேனும் முறையில் கொள்ளலாம், அத்துடன் அதனை வைத்திருக்கலாம், குத்தகையில் அல்லது வாடகையில் எடுக்கலாம் அல்லது கொடுக்கலாம், ஈடுவைக்கலாம், அடகுவைக்கலாம், விற்கலாம் அல்லது வேறுவகையில் கையுதிர்க்கலாம்;

(ஆ) முகாமைப் பயிற்சி நிலையங்களையும், கல்வி நிலையங்களையும் தாபித்துச் செயற்படுத்தலாம்;

(இ) முகாமைத்துவத்தின் எல்லா அம்சங்கள் தொடர்பிலுமான ஆராய்ச்சியை நடாத்தலாம், அதில் துணைபுரியலாம், அதனை ஒருங்கிணைக்கலாம், அத்துடன் ஊக்குவிக்கலாம்;

(ஈ) அதனது அலுவலர்களையும், சேவையாளர்களையும் நியமிக்கலாம், ஊழியத்திலமர்த்தலாம், அவர்களுக்கு ஊதியம் வழங்கலாம், அத்துடன் அவர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கலாம்;

(உ) நிறுவகத்தினால் வழங்கப்படும் எச்சேவைக்கேனுமான கட்டணங்களை அல்லது விதிப்பனவுகளை விதித்தறவிடலாம்;

(ஊ) நிறுவகத்துக்கு வழங்கப்படும் எச்சேவைக்கேனுமான கட்டணங்களை அல்லது விதிப்பனவுகளைச் செலுத்தலாம்;

(எ) நிறுவகத்தின் நோக்கங்களுக்குத் தேவைப்படுவனவான பொறித்தொகுதியையும், சாதனங்களையும், உபகரணங்களையும் இறக்குமதி செய்யலாம் என்பதுடன், நிறுவகத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கான உபகரணங்களையும், நிதிகளையும், ஆளணியினரையும், வேறு ஏதேனும் உதவியையும் பெற்றுங்கொள்ளலாம்;

(ஏ) அதனது சொந்த ஆளணியினருக்கென செயல் நிறைவேற்றத் தராதரங்களைத் தாபித்து, அத்தகைய நிறைவேற்றத்தை மதிப்பீடு செய்யலாம் என்பதுடன், அதன்மீது நியாயமான நடவடிக்கையும் எடுக்கலாம்;

(ஐ) அதன் ஊழியர்களுக்கென நலன்புரி வசதிகளையும், பொழுதுபோக்கு வசதிகளையும் தாபித்துப் பேணி வரலாம்;

(ஒ) நியமனம், பயிற்சி, பதவியுயர்வு, ஊதியம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு, நடத்தை, லீவு வழங்கல் ஆதியன உட்பட, அதனது அலுவலர்கள் தொடர்பாகவும், சேவையாளர்கள் தொடர்பாகவும் விதிகளை ஆக்கலாம்;

(ஓ) நிறுவகத்தின் பொது நிருவாகம் தொடர்பாக விதிகளை ஆக்கலாம்;

(ஔ) நிறுவகத்தின் குறிக்கோள்களையும் பணிகளையும் எய்துவதற்கு அவசியமான அல்லது உகந்தனவான, அல்லது இடைநேர்விளைவான மற்றெல்லாக் காரியங்களையும் புரியலாம்.

அமைச்சரின் பணிப்புக ளின் கீழ் நிறுவகம் அதனது தத்துவங்களைப் பிரயோகித்தல் வேண்டும்.

5. நிறுவகமானது, அதனது தத்துவங்களைப் பிரயோகிப்பதிலும், அதனது குறிக்கோள்களை நிறைவேற்றுவதிலும், அரசாங்கக் கொள்கைக்கும், அத்தகைய கொள்கை தொடர்பில் அமைச்சரால் வழங்கப்படும் ஏதேனும் பொதுவான அல்லது சிறப்பான பணிப்புக்கும் இணங்கியொழுகுதல் வேண்டும்.

ஆளும் பேரவையின் அமைப்பு.

6. (1) நிறுவகமானது, அமைச்சரால் நியமிக்கப்படுவதான, பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டமைந்த, இதனகத்துப்பின்னர் "பேரவை" எனக் குறிப்பிடு செய்யப்படும் ஆளும் பேரவை ஒன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) அரசாங்க நிருவாகம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளராக அப்போதைக்குப் பதவி வகிக்கும் ஆளாகவிருக்க வேண்டியவரான தவிசாளர் ;

(ஆ) முதலமைச்சரின் செயலாளராக அப்போதைக்குப் பதவி வகிக்கும் ஆள் ;

(இ) நிதி, திட்டமிடல் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளராக அப்போதைக்குப் பதவிவகிக்கும் ஆள் ;

(ஈ) திட்டச் செயற்பாடு என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளராக அப்போதைக்குப் பதவி வகிக்கும் ஆள் ;

(உ) உயர் கல்வி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளராக அப்போதைக்குப் பதவிவகிக்கும் ஆள் ;

(ஊ) உள்நாட்டு அலுவல்கள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளராக அப்போதைக்குப் பதவி வகிக்கும் ஆள் ;

(எ) அமைச்சரின் அபிப்பிராயத்தில், தனியார் துறை முகாமைத்துவத்தில் இனங்காண் கீர்த்திபெற்றுள்ள ஆளொருவர் ;

(ஏ) நிறுவகத்தின் பணிப்பாளராக அப்போதைக்குப் பதவி வகிப்பவரும் பேரவையின் அவைகூட்டுநராகப் பணியாற்ற வேண்டியவருமான ஆள்.

(2) ஆளொருவர்—

(அ) பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராக இருந்தால் அல்லது பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராக வந்தால் ; அல்லது

(ஆ) நிறுவகத்தினுல் அல்லது நிறுவகத்தின் சார்பில் செய்யப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தின்கீழான உரிமையெதனையும் நேர்முகமாக அல்லது நேர்முகமாகவல்லாது கொண்டிருத்தல் அல்லது நலன் எதனையும் நேர்முகமாக அல்லது நேர்முகமாகவல்லாது துய்த்தால் ; அல்லது

(இ) பேரவையின் உறுப்பினர் ஒருவர் என்ற வகையில் அவர் தமது பணிகளைப் புரிதலைப் பங்கப்படுத்தும் வகையில் பாதிக்கக்கூடிய சாத்தியமுடைய அத்தகைய ஏதேனும் நிதிசார் அக்கறையை அல்லது வேறு அக்கறையைக் கொண்டிருந்தால்,

அவர் பேரவையின் உறுப்பினர் ஒருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது பேரவையின் உறுப்பினர் ஒருவராகத் தொடர்ந்திருப்பதற்கு தகுதியற்றவராதல் வேண்டும்.

பேரவை உறுப்பினர்களின் பதவிக்காலம்.

7. (1) ஆறும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும், அவர், இறப்பினால், பதவிதுறப்பினால் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதனால் முன்னராகவே பதவியை வறிதாக்கினாலொழிய, மூன்று ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(2) (அ) ஆறும் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட பேரவை உறுப்பினர் ஒருவர் இறக்குமிடத்து அல்லது பதவிதுறக்குமிடத்து அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுமிடத்து, அமைச்சரானவர், அவ்வுட்பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்திற் கொண்டு, அவ்வாறு இறக்கும், பதவிதுறக்கும், அல்லது பதவியிலிருந்து அகற்றப்படும் உறுப்பினரின் இடத்துக்கு உறுப்பினராகவிருப்பதற்கென இன்னொருவரை நியமிக்கலாம்.

(ஆ) இவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட பேரவை உறுப்பினரெவரும் முன்னராகவே அவர் பதவிதுறந்திருந்தாலொழிய அல்லது இறப்பினால் அல்லது பதவியகற்றுகையினால் முன்னராகவே அவரது பதவியை வறிதாக்கியிருந்தாலொழிய, அவர் எவ்வுறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக்காலத்தின் எஞ்சியுள்ள பாகத்துக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(3) ஆறும் பிரிவின் (ஈ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட பேரவை உறுப்பினரொருவர் சுகவீனம் காரணமாக அல்லது வேறு பலவீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அவரது பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தற்காலிகமாக இயலாதவராயிருக்குமிடத்து, அமைச்சரானவர், அப்பந்தியின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு அவரது இடத்திற் செயலாற்றவென வேறு எவரேனும் ஆளை நியமிக்கலாம்.

பேரவை உறுப்பினரொருவரைப் பதவியிலிருந்து அகற்றுவதற்கு அமைச்சருக்குள்ள தத்துவம்.

8. (1) அமைச்சரானவர், அவ்வாறு செய்வது உசிதமானதென அவர் எண்ணினால், 6 ஆம் பிரிவின்கீழ் அல்லது 7 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட பேரவை உறுப்பினர் எவரையும் காரணம் கூறாது பதவியிலிருந்து அகற்றலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் உறுப்பினர் எவரதும் பதவியகற்றுகையானது நீதிமன்றமெதிலும் கேள்விக்குட்படுத்தப்படுதலாகாது.

பேரவை உறுப்பினர்கள் பதவிதுறத்தல்.

9. பேரவையின் உறுப்பினரொருவர் அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட கடிதம் மூலம் எந்நேரத்திலும் தமது பதவியைத் துறக்கலாம்.

*பேரவையின் உறுப்பினராக மீளநியமிக்கப் படுவதற்கான தகவுடைமை.*

10. எட்டாம் பிரிவின்கீழ் பதவியிலிருந்து அகற்றப்படும் உறுப்பின ரொருவர் தவிர்ந்த, பதவியை வறிதாக்கும் உறுப்பினரெவரும் மீள் நிய மனத்திற்குத் தகவுடையவராதல் வேண்டும்.

*நிறுவகத்தின் செயல்கள் அல்லது நடவடிக்கை கள், ஏதேனும் வெற்றிடம் காரணமாக அல்லது உறுப்பினர் ஒருவரின் நியமனத்தி லான குறைபாடு காரணமாக செல்லுபடி யற்றதாகக் கருதப்படுத லாகாது.*

11. பேரவையில் ஏதேனும் வெற்றிடம் இருக்கின்றமை காரணமாக மாத்திரம் அல்லது பேரவையின் உறுப்பினரெவரதும் நியமனத்திலான ஏதேனும் குறைபாடு காரணமாக மாத்திரம் நிறுவகத்தின் செயல் அல் லது நடவடிக்கை எதுவும் செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலாகாது.

*பேரவை உறுப்பினர் களுக்கான ஊதியம்.*

12. பேரவை உறுப்பினர்கள் அனைவருக்கும் அல்லது பேரவை உறுப் பினரெவருக்கும், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்ச ரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஊதியம் நிறுவகத்தின் நிதியங்களிலிருந்து செலுத்தப்பட லாம்.

*பேரவையின் கூட்டங்கள்.*

13. (1) பேரவையின் கூட்டங்கள் ஒவ்வொரு மாதத்திலும் ஆகக் குறைந்தது ஒரு முறையேனும் நடாத்தப்படுதல் வேண்டும்.

(2) பேரவையின் ஒவ்வொரு கூட்டம்பற்றியும் ஆகக்குறைந்தது ஏழு நாட்கள் கொண்ட அறிவித்தலை தவிசாளர் ஒவ்வோர் உறுப்பினருக்கும் எழுத்தில் கொடுத்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய கூட்டத்தில் கையாளப்படவுள்ள அலுவலை அத்தகைய அறிவித்தலில் குறித்துரைத்த லும் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளில் எது எவ்வாறிருப்பினும், பேரவையின் சிறப்புக் கூட்டமொன்றைக் கூட்டுமாறு பேரவையின் இரு உறுப்பினர்களால் எழுத்தில் வேண்டப்படுவதன்பின்னர் ஏழு நாட்களுள், தவிசாளரானவர் பேரவையின் சிறப்புக் கூட்டமொன்றைக் கூட்டுதல் வேண்டும்.

(4) பேரவையின் கூட்டமெதற்கும் ஐந்து உறுப்பினர்கள் கூட்டநடப் பெண்ணை அமைதல் வேண்டும்.

(5) பேரவையின் கூட்டங்களுக்குத் தவிசாளர் தலைமை தாங்குதல் வேண்டும் என்பதுடன், பேரவையின் கூட்டம் எதற்கும் தவிசாளர் சமூக மளிக்காதவிடத்து, சமூகமாயுள்ள உறுப்பினர்களுள் பெரும்பான்மை யானோரால் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர் ஒருவர் அத்தகைய கூட் டத்துக்குத் தலைமை தாங்குதலும் வேண்டும்.

(6) சுகவீனம் காரணமாக அல்லது வேறு பலவீனம் காரணமாக அல் லது இலங்கையில் இல்லாமை காரணமாக தவிசாளர் அவரது பதவிக்குரிய

கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராயிருப்பின் உறுப்பினர்களுள் ஒருவரை அவரது இடத்தில் செயலாற்றவென அமைச்சர் நியமிக்கலாம்.

(7) பேரவையின் கூட்டமொன்றில் தீர்மானிக்கப்படும் ஏதேனும் விடயத்தில் அல்லது கருமத்தில் வாக்குகள் சமனுனதாயிருக்குமிடத்து, அத்தகைய கூட்டத்தின் தவிசாளரானவர், அவரது வாக்குக்கு மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(8) இதனகத்து அடங்கியுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக பேரவை அதன் சொந்த நடவடிக்கைமுறையைத் தீர்மானிக்கலாம்.

## பாகம் II

### நிறுவகப் பணிப்பாளரினதும், நிறுவகத்தின் ஏனைய அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் நியமனம்

நிறுவகத்தின் பணிப்பாளரது நியமனம்.

14. (1) அமைச்சரானவர் நிறுவகத்தின் பணியாட்டொருதிக்கு, பிரதான நிறைவேற்று அலுவலராயிருக்கவேண்டிய நிறுவகப் பணிப்பாளர் ஒருவரை (இவர் இதனகத்துப்பின்னர் "பணிப்பாளர்" என அழைக்கப்படுவார்) நியமிக்கலாம்.

(2) பணிப்பாளரானவர் அவருக்குக் கையளிக்கப்படக்கூடியனவான அத்தகைய தத்துவங்களைப் பிரயோகித்தல் வேண்டும், கடமைகளைப் புரிதல் வேண்டும் அல்லது பணிகளை நிறைவேற்றுதல் வேண்டும்.

(3) அமைச்சரானவர் (1) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட பணிப்பாளரை பதவியிலிருந்து அகற்றலாம் என்பதுடன், அத்தகைய பதவியகற்றுகையானது எந்நீதிமன்றத்திலும் கேள்விக்குட்படுத்தப்படுதலுமாகாது.

(4) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறுன அத்தகைய ஊதியம் பணிப்பாளருக்குச் செலுத்தப்படலாம்.

நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கான நியமனங்கள் தொடர்பில் நிறுவகத்தின் தத்துவங்கள்.

15. (1) இச்சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கமைவாக, பேரவையானது—

(அ) நிறுவகத்தின் நோக்கங்களுக்கு அவசியமாகக்கூடியவாறுன அத்தகைய வேறு அலுவலர்களையும் சேவையாளர்களையும் நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு நியமிக்கலாம்;

(ஆ) நிறுவகத்தின் பணியாட்டொகுதியினரைப் பதவிவிலக்கலாம்; அத்துடன் பணியாட்டொகுதியின்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கலாம்;

(இ) பணியாட்டொகுதியினரின் கூலிகளை அல்லது சம்பளங்களை அல்லது வேறு ஊதியத்தைத் தீர்மானிக்கலாம்;

(ஈ) அத்தகைய பணியாட்டொகுதியினரது சேவை நியதி நிபந்தனைகளைத் தீர்மானிக்கலாம்; அத்துடன்

(உ) அத்தகைய பணியாட்டொகுதியினரின் நலன் கருதி சகாய நிதியங்களையும் திட்டங்களையும் தாபித்து ஒழுங்குபடுத்தலாம்; அத்துடன், அத்தகைய நிதியம் எதற்கும் அல்லது திட்டம் எதற்கும் உதவுதொகைகள் அளிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள எல்லா விடயங்கள் தொடர்பிலும், அல்லது அவற்றுள் ஏதேனும் தொடர்பில் இச்சட்டத்தின் கீழ் விதிகள் ஆக்கப்படலாம்.

நியமனங்கள் தொடர்பில், பேரவையின் தத்துவங்கள் பணிப்பாளருக்குக் கையளிக்கப்படுதல்.

16. (1) நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு ஏனைய அலுவலர்களை அல்லது சேவையாளர்களை நியமித்தல் தொடர்பிலான பேரவையின் தத்துவங்கள் யாவற்றையும் அல்லது அவற்றுள் எதனையும் அது பணிப்பாளருக்குக் கையளிக்கலாம். பணிப்பாளருக்குக் கையளிக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் அவரால் நியமிக்கப்பட்ட உயர்தொழிற் பணியாட்டொகுதியைச் சேர்ந்த உறுப்பினர்கள் எவரினதும், ஊதியம் உள்ளடங்கலான ஊழிய நிபந்தனைகள், பணிப்பாளரால் பேரவையின் ஒருப்பாட்டுடன் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(2) இப்பிரிவின்கீழ் பணிப்பாளரால் ஆக்கப்பட்ட ஏதேனும் முடிபினால் இன்னலுறும் ஆளெவரும் அதற்கெதிராக பேரவைக்கு எழுத்தில் மேன்முறையீடு செய்யலாம் என்பதுடன், அத்தகைய மேன்முறையீட்டின் மீதான பேரவையின் முடிபு இறுதியானதாதலும் வேண்டும்.

(3) நிறுவகத்தின் உயர்தொழிற் பணியாட்டொகுதியைச் சேர்ந்த உறுப்பினர் எவரினதும் பதவிவிலக்கலானது பேரவையால் அது அங்கீகரிக்கப்பட்டாலொழிய பயனுறுதலாகாது.

கடமைகளைத் தீர்மானித்தல்.

17. நிறுவகத்தின் அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் கடமைகளை பணிப்பாளர் தீர்மானித்தல் வேண்டும்.

நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு பகிரங்க அலுவலர்களை நியமித்தல்.

18. (1) பேரவையின் வேண்டுகோளின்பேரில், பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரும், அவ்வலுவலரின் சம்மதத்துடனும், அரசாங்க நிருவாகம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரது அமைச்சுச் செயலாளரின் சம்மதத்துடனும், நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு அதையொத்த சம்மதத்துடன் நிறுவகத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப் பகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம், அல்லது அதையொத்த சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரும் நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 13 (2) ஆம் பிரிவின் ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன், அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரும், நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து, 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 13 (3) ஆம் பிரிவின் ஏற்பாடுகள், ஏற்ற மாற்றங்களுடன், அவருக்கும், அவர் தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்றின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர், அத்தகைய அலுவலரது அல்லது சேவையாளரது சம்மதத்துடனும், அத்தகைய கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையின் சம்மதத்துடனும், அக்கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையினாலும் பேரவையின் உறுப்பினர்களினாலும் உடன்பட்டுக்கொள்ளப்படக்கூடியவாறான சகாய நிதிய உரிமைகள் தொடர்பானவை உட்பட அத்தகைய நியதிகள், நிபந்தனைகள் மீது நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(5) குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்கு அரசாங்கத்துக்குச் சேவையாற்றுவதற்கு உடன்பட்டு அரசாங்கத்துடன் ஒப்பந்தமொன்றைச் செய்துகொண்டுள்ள எவரேனும் ஆளை நிறுவகம் ஊழியத்திலமர்த்து மிடத்து, அவ்வாளினால் நிறுவகத்துக்கு ஆற்றப்பட்ட சேவையின் காலப்பகுதியெதுவும், அத்தகைய ஒப்பந்தத்தின் கடப்பாடுகளை நிறை வேற்றும் நோக்கத்திற்காக அரசாங்கத்திற்கு ஆற்றப்பட்ட சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

## பாகம் III

## நிதி

19. (1) நிறுவகம் அதற்கென சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். நிறுவகத்தின் நிதியம்.

(2) (அ) நிறுவகத்தின் பயன்பாட்டுக்கென பாராளுமன்றத்தினால் காலத்துக்குக்காலம் வாக்களிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்; அத்துடன்

(ஆ) நிறுவகத்தால், அதன் தத்துவங்களையும், பணிகளையும், கடமைகளையும் பிரயோகித்தல்வகையாக, நிறைவேற்றுதல்வகையாக, அத்துடன் புரிதல்வகையாக பெற்றுக் கொள்ளப்பட்ட எல்லாப் பணத்தொகைகளும்,

நிறுவகத்தின் நிதியத்துக்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(3) நிறுவகத்தின் தத்துவங்களையும், பணிகளையும், கடமைகளையும் பிரயோகித்தல்வகையாக, நிறைவேற்றுதல்வகையாக, புரிதல்வகையாக அதனால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தை இறுப்பதற்குத் தேவைப்படுவனவான எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்துக்குப் பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்.

20. பஞ்சாங்க ஆண்டே நிறுவகத்தின் நிதியாண்டாதல் வேண்டும். நிறுவகத்தின் நிதியாண்டு.

21. கணக்குகள் கணக்காய்வு செய்யப்படுதல் தொடர்பான, அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள், நிறுவகத்தின் கணக்குகள் கணக்காய்வு செய்யப்படுதல் தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும். கணக்குகள் கணக்காய்வு செய்யப்படுதல்.

## பாகம் IV

## பொது

22. நிறுவகத்தின் எல்லா உறுப்பினர்களும், அலுவலர்களும், சேவையாளர்களும், தண்டனைச் சட்டக்கோவையின் கருத்தெல்லைக்குட்படவும், தண்டனைச் சட்டக்கோவையின் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும். நிறுவகத்தின் உறுப்பினர்களும் ஊழியர்களும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல்.

நிறுவகமானது இலஞ்சச்சட்டத்தின் கருத்தெல்லைக் குட்பட அட்டவணைப்படுத்தப் பட்ட நிறுவகமாகக் கருதப்படுதல்.

23. நிறுவகமானது இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்ருகக் கருதப்படுதல் வேண்டு என்பதுடன், அதற்கிணங்க அச்சட்டத்தின் ஏற்பாடுகள் பொருள்கொ ளப்படுதலும் வேண்டும்.

இரகசியம்.

24. (1) நிறுவகத்தின் உறுப்பினர் எவரும், அல்லது நிறுவகத்தின் அலுவலர் அல்லது சேவையாளர் எவரும், அமைச்சருக்குத் தவிர, அல்லது அவரது கடமைகளைப்புரியும், அல்லது அவரது பணிகளை நிறைவேற்றும் நோக்கங்களுக்காகத் தவிர, அல்லது நீதிமன்றமொன்றின் முன்னிலையில் அல்லது ஏதேனும் சட்டத்தின்கீழ் அவ்வாறு செய்வதற்குத் தேவைப்படுத்தப்பட்டால் தவிர, அவரது கடமைகளைப் புரிதல்வகையாக அல்லது பணிகளை நிறைவேற்றுதல்வகையாக அவரால் பெறப்பட்ட தகவல் எதனையும் எவரேனும் ஆளுக்கு வெளிவிடுதலாகாது :

ஆயின், எவ்வாருயினும், அரசாங்கமல்லாத இன்னெரு திறத்தவருடனை ஏதேனும் உடன்படிக்கையினுல் எவ்விடயங்களை அந்தரங்கமானவையெனக் கணிப்பதற்கு நிறுவகம் பிணிக்கப்பட்டுள்ளதோ அவ்விடயங்கள் தொடர்பான தகவல் எதுவும் இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின்கீழ் வெளிவிடப்படுதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறும் ஆளெவரும் தவறென்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

ஒப்பந்தங்கள்.

25. (1) நிறுவகம் சார்பில் செய்யப்படும் ஒப்பந்தங்கள் பின்வருமாறு ஆக்கப்படலாம் :—

(அ) தனிப்பட்ட ஆட்களுக்கிடையில் செய்யப்பட்டால், எழுத்திலிருத்தல் வேண்டுமென சட்டத்தினுல் தேவைப்படுத்தப்படுவதான ஒப்பந்தமொன்று நிறுவகத்தின் சார்பில் நிறுவகத்தின் பொது இலச்சினையின்கீழ் எழுத்தில் செய்யப்படலாம் ;

(ஆ) தனிப்பட்ட ஆட்களுக்கிடையில் செய்யப்பட்டால், பொறுப்பு சுமத்தப்படுவோரான திறத்தவர்களால் ஒப்பமிடப்பட்டு எழுத்திலிருத்தல் வேண்டுமென சட்டத்தினுல் தேவைப்படுத்தப்படுவதான ஒப்பந்தமொன்று, நிறுவகத்தின் சார்பில், அதற்கென நிறுவகத்தால் முறையாத அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளினுல் அல்லது ஆட்களினுல் ஒப்பமிடப்பட்டு எழுத்தில் செய்யப்படலாம் ; அத்துடன்

(இ) தனிப்பட்ட ஆட்களுக்கிடையில் வாய்மொழிமூலம் மட்டும் செய்யப்பட்டு எழுத்தில் வடிக்கப்படாததாக இருந்தாலும் சட்டப்படி செல்லுபடியாவதான ஒப்பந்தமொன்று, நிறுவகத்தின் சார்பில், அதற்கென நிறுவகத்தால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளினுல் அல்லது ஆட்களினுல் வாய்மொழி மூலம் செய்யப்படலாம்.

(2) இப்பிரிவுக்கிணங்க செய்யப்பட்ட ஒப்பந்தமொன்று, சட்டப்படி பயனுறுதல் வேண்டும் என்பதுடன், நிறுவகத்தையும், அவ்வொப்பந்தத் துக்கான எல்லா வேறு திறத்தவர்களையும், அவர்களின் சட்டமுறைப் பிரதிநிதிகளையும் பிணிப்பதாதலும் வேண்டும்.

காணி கொள்ளற் சட்டத்தின் கீழ் நிறுவகத் துக்காக அசைவற்ற ஆதனம் கொள்ளல்.

26. (1) நிறுவகத்தின் நோக்கங்களுக்கென அசைவற்ற ஆதனம் எதுவும் கொள்ளப்படவேண்டியிருந்து, கசெற்றில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் உத்தேசக் கொள்ளலை அமைச்சர் அங்கீகரிக்குமிடத்து, அவ்வாதனமானது ஒரு பகிரங்க நோக்கத்துக்கெனத் தேவைப்படுவதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்க காணி கொள்ளற் சட்டத்தின்கீழ் கொள்ளப்பட்டு, நிறுவகத்துக்குக் கைமாற்றவும்படலாம்.

(2) காணி கொள்ளற் சட்டத்தின்கீழ் நிறுவகத்திற்கென ஏதேனும் அசைவற்ற ஆதனத்தைக் கொள்வதற்காகச் செலுத்தப்படற்பாலதான பணத்தொகை எதுவும் நிறுவகத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

அரசின் அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களை நிறுவகத்திற்குக் கிடைக்கக்கூடியதாக்குதல்.

27. (1) அரசின் அசைவற்ற ஆதனம் எதுவும் நிறுவகத்தின் நோக்கத்துக்கெனத் தேவைப்படுமிடத்து, அத்தகைய நோக்கமானது முடிக்குரிய காணிகள் கட்டளைச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் அத்தகைய ஆதனத்தின் சிறப்பான வழங்குகையொன்று அல்லது சிறப்பான குத்தகையொன்று எந்தவொரு நோக்கத்துக்காகச் செய்யப்படலாமோ அந்தவொரு நோக்கமாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்க, அக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள், நிறுவகத்துக்குச் செய்யப்படும் அத்தகைய காணியின் சிறப்பான வழங்குகையொன்றுக்கு அல்லது சிறப்பான குத்தகையொன்றுக்கு ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(2) அரசின் அசைவுள்ள ஆதனம் எதுவும் நிறுவகத்தின் நோக்கத்துக்கெனத் தேவைப்படுமிடத்து, அமைச்சரானவர் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அத்தகைய ஆதனத்தின் உடைமையையும் பயன்பாட்டையும் நிறுவகத்துக்குக் கைமாற்றலாம், அத்துடன் நிறுவகத்துக்கு உரித்தாக்கலாம் :

ஆயின், எவ்வாறாயினும், அரசின் ஏதேனும் அசைவுள்ள ஆதனத்தைப் பாதிப்பதான கட்டளையெதுவும், அத்தகைய ஆதனத்தின்மீது கட்டுப்பாட்டைக் கொண்டிருப்பவரான அமைச்சரின் ஒருப்பாட்டுடனன்றி, அமைச்சரால் இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின்கீழ் செய்யப்படுதலாகாது.

நிறுவகத்தின் பயன்பாட்டுக்கென வளவுகள் முதலியனவற்றை அரசு கிடைக்கக் கூடியதாக்குதல்.

28. அரசானது அவசியமானவையெனக் கருதப்படக்கூடிய அத்தகைய காணியையும், கட்டடத்தையும், வேறு வசதிகளையும் நிறுவகத்தின் பயன்பாட்டுக்கென ஏற்பாடு செய்யலாம்.

"இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்" எனும் சொற்களைப் பயன்படுத்துவதில் மட்டுப்பாடு.

29. (1) நிறுவகத்தைத் தவிர்ந்த வேறு ஆளெவரும், "இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்" எனும் சொற்களை உள்ளடக்கும் குறிப்பீட்டுப் பெயரின்கீழ் ஏதேனும் செயல்நடவடிக்கையை, தொழிலை, வியாபாரத்தை அல்லது வாழ்க்கைத்தொழிலைக் கொண்டுநடாத்துதல், அல்லது எந்த வேறு சொற்களின் பயன்பாடு அத்தகைய ஆள் அத்தகைய செயல் நடவடிக்கையை, தொழிலை, வியாபாரத்தை அல்லது வாழ்க்கைத் தொழிலை, "இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்துடன்" கூட்டாக அல்லது அதன் அங்கீகாரத்துடன் அல்லது அதன் அதிகாரத்தின்கீழ் கொண்டுநடாத்துகின்றாரென உட்கிடையாகவுணர்த்துமோ அந்த வேறு சொற்களை உள்ளடக்கும் குறிப்பீட்டுப் பெயரின்கீழ் ஏதேனும் செயல் நடவடிக்கையை, தொழிலை, வியாபாரத்தை அல்லது வாழ்க்கைத் தொழிலைக் கொண்டு நடாத்துதலும் ஆகாது.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறும் ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

நிறுவகத்துக்கு சிறப்பான அல்லது பொதுவான பணிப்புகளை வழங்குவதற்கான அமைச்சரது தத்துவம்.

30. (1) அமைச்சரானவர், நிறுவகத்தின் கடமைகள் புரியப்படுதல் தொடர்பிலும், தத்துவங்கள் பிரயோகிக்கப்படுதல் தொடர்பிலும் எழுத்திலான, சிறப்பான அல்லது பொதுவான பணிப்புகளை வழங்கலாம் என்பதுடன், அத்தகைய பணிப்புகளுக்கு நிறுவகம் பயன்கொடுத்தலும் வேண்டும்.

(2) அமைச்சரானவர், நிறுவகத்தின் பணி தொடர்பாக அவர் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய தகவலை தமக்கு எழுத்தில் கொடுத்துதவுமாறு காலத்துக்குக்காலம் நிறுவகத்தைப் பணிக்கலாம்.

விதிகள்.

31. (1) எவ்விடயங்களுக்காக விதிகள் ஆக்கப்படுவதற்கு இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அல்லது ஆக்கப்படுதல் வேண்டுமென் இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டுள்ளதோ அவ்வெல்லா விடயங்கள் தொடர்பாகவும், அல்லது அவற்றுள் எவையேனும் விடயங்கள் தொடர்பாக நிறுவகம் விதிகளை ஆக்கலாம்.

(2) நிறுவகத்தினால் ஆக்கப்பட்ட விதியெதுவும் அமைச்சரால் அங்கீகரிக்கப்படும்வரை பயனுறுதலாகாது.

இச்சட்டத்தின் கீழ் அல்லது நிறுவகத்தின் பணிப்பின் மேல் எடுக்கப்படும் செயலுக்கான பாதுகாப்பு.

32. (1) (அ) இச்சட்டத்தின்கீழ் நிறுவகத்தால் நல்லெண்ணத்துடன் செய்யப்படும் அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் செயல் எதற்காகவும் அந்நிறுவகத்துக்கெதிராக; அல்லது

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அல்லது பேரவையின் பணிப்பின் மேல் அந்நிறுவகத்தின் எவரேனும் உறுப்பினரால், அலுவலரால், சேவையாளரால் அல்லது முகவரால் நல்லெண்ணத்துடன் செய்யப்படும் அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் செயல் எதற்காகவும் அவருக்கெதிராக,

தொடர்ச்சியெதுவும் அல்லது குற்றவழக்கெதுவும் எழலாகாது.

(2) முதலாம் உட்பிரிவின்கீழ் குறிப்பீடு செய்யப்படுள்ளவாறன அத்தகைய ஆளினல் இச்சட்டத்தின்கீழ் அல்லது பேரவையின் பணிப்பின் மேல் செய்யப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின் முன்பாக அவருக்கெதிராகக் கொண்டுவரப்பட்ட ஏதேனும் தொடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அத்தகைய ஆளினல் உறப்பட்ட ஏதேனும் செலவானது, அச்செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்த்தால், நிறுவகத்தின் நிதிகளிலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

33. நிறுவகத்துக்கெதிராகக் கொண்டுவரப்படும் வழக்கெதிலும், பேரவையின் உறுப்பினரொருவரது உடலுக்கெதிராக அல்லது ஆதனத்துக்கெதிராக எழுத்தாணையெதுவும் விடுக்கப்படுதலாகாது.

பேரவையின் உறுப்பினர் ஒருவரது உடலுக்கெதிராக அல்லது ஆதனத்துக்கெதிராக எழுத்தாணையெதுவும் விடுக்கப்படுதலாகாது.

34. இச்சட்டத்தின்கீழ் தவறென்றைப் புரியும் ஆளொவ்வொருவரும், நீதிவானெருவர் முன்னராக, விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஆறு மாதங்களுக்கு மேற்படாதவொரு காலப்பகுதிக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது ஐந்நூறு ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்துக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் என்னும் இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

தவறுகளும் தண்டங்களும்.

35. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் பிறவாறு தேவைப்படுத்தினலொழிய—

பொருள் கோடல்.

"பகிரங்கக் கூட்டுத்தாபனம்" என்பது, கம்பெனிகள் கட்டளைச் சட்டம் தவிர்ந்த எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினல் அல்லது சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்டுள்ளதும் அல்லது தாபிக்கப்படுவதும், கொடையென்ற வகையில், கடன் என்ற வகையில் அல்லது வேறு வகையில் அரசாங்கத்தினல் முழுக்க முழுக்க அல்லது பகுதியளவில் உதவப்பட்ட மூலதனத்தை அல்லது நிதியை உடைய ஏதேனும் கூட்டுத்தாபனம், சபை அல்லது வேறு குழு எனப் பொருளாகும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ந் தேதிக்கு முன் எதிர் வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.